### இந்தியாவின் பல்வேறு மாநில சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டது!

# மதுரை தமுக்கம் மைதானத்தில் ‘மதி’ கண்காட்சி - உணவுத் திருவிழா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

மதுரை, நவ.24–

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.11.2025) மதுரை, தமுக்கம் மைதானத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் பல்வேறு மாநில சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட மதி கண்காட்சி (சாரஸ் மேளா) மற்றும் உணவுத் திருவிழாவினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்பதற்காக 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்தார். அன்று அவர் தொடங்கிய மகளிர் சுய உதவிக்குழுக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்த போது வங்கிகளின் முக்கியமான மற்றும் மரியாதைக்குரிய வாடிக்கையாளர்களாக முன்னேற்றம் அடையும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களை அடுத்த நிலைக்கு உயர்த்தினார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேலும் வளப்படுத்தும் நோக்கத்துடன் துணை முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட, மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் என பல்வேறு செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதன் வாயிலாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

### மதி கண்காட்சி

மதுரை, தமுக்கம் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள மதி கண்காட்சியில் 200 அரங்குகளில் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழு மகளிரின் தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்திட 171 அரங்குகளும், குஜராத், ஆந்திரா, மேற்கு வங்காளம், கேரளா, பாண்டிச்சேரி, ஒரிசா, தெலுங்கானா, அரியானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட 29 அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த கண்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், கோயம்புத்தூர் ஜம்பொன் நகைகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், திண்டுக்கல் சின்னாளப்பட்டு சேலைகள், திருவண்ணாமலை ஆரணி பட்டு, நாமக்கல் கொல்லிமலை மிளகு, நீலகிரி உல்லன் ஆடைகள், கடலூர் சுடுமண் பொம்மைகள், திருப்பூர் பருத்தி ஆயத்த ஆடைகள், கரூர் கைத்தறி துண்டுகள், திருநெல்வேலி பத்தமடை பாய்கள், திருப்பத்தூர் தோல் பைகள் உள்பட பல்வேறு மாவட்டங்களின் சிறப்பு வாய்ந்த நூல் வளையல்கள், மரச் சிற்பங்கள், எம்ப்ராய்டரி ஆடைகள், கைவினைப் பொருட்கள், கண்ணாடி ஓவியங்கள், கைத்தறிப் புடவைகள், உலர் மீன்கள், மரச்செக்கு எண்ணை, பருத்தி ஆடைகள், சங்குகள் மற்றும் சிப்பி நகைகள், ஆயத்த ஆடைகள், வெட்டிவேர் பொருட்கள், பிரம்பு பொருட்கள், மூலிகைப் பொருட்கள், சணல் பொருட்கள், பனை பொருட்கள், கலம்காரி பைகள், கண்ணாடி மாலைகள் உள்ளிட்ட பல்வேறு தயாரிப்பு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

குஜராத்தின் அகர் பத்திகள் மற்றும் வாசனை திரவியங்கள், ஆந்திராவின் அழகிய மரச் சிற்பங்கள், மேற்கு வங்காளத்தின் கையால் செய்யப்படும் ஆபரணங்கள், ஒரிசாவின் கைவினைப் பொருட்கள், தெலுங்கானாவின் கைத்தறி ஆடைகள், மகாராஷ்டிராவின் மூங்கில் கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட கலைநயம் மிகுந்த கைவினைப் பொருட்கள் விற்பனை செய்திட 29 அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

### உணவுத் திருவிழா

மிகப்பெரிய உணவகங்களில் சமைக்கப்படும் எவ்வளவு உயர்ந்த உணவு என்றாலும், வீட்டில் பெண்களின் கைப்பக்குவத்தில் சமைக்கப்படும் உணவு வகைகளுக்கு ருசியிலும், தரத்திலும் ஈடுசெய்ய முடியாது. அத்தகைய பெண்கள் இணைந்த மகளிர் சுய உதவிக்குழுவினர் தயாரித்த உணவு பொருட்கள் மற்றும் உணவு வகைகளை அனைவரும் அறிந்திட வேண்டும் என்பதற்காக இந்த உணவுத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நமது முன்னோர்கள் பாரம்பரிய உணவு வகைகளாக சாமை, கேழ்வரகு, தினை, குதிரைவாலி, கம்பு, சோளம் உள்ளிட்ட நவதானியங்களை அன்றாட உணவில் பயன்படுத்தியதாலும், அதற்கேற்ப உடல் உழைப்பை மேற்கொண்டதினாலும் அவர்களுக்கு நோய் தாக்குதல் என்பது அரிதாகவே இருந்தது.

நாம் ஆரோக்கியமான வாழ்வு வாழ சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் செல்ல மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் தரமான, சத்தான, பாரம்பரிய உணவுகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

மதுரை தமுக்கம் மைதானத்தில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால், இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்டுள்ள உணவுத் திருவிழாவில் 50 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறப்பு வாய்ந்த சென்னை அத்தோ, வடை மசாலா போன்ற பர்மா வகை உணவுகள், கடலூர் - மீன் கட்லெட், மீன் பொடிமாஸ், சுறா புட்டு, மீன் 65, திண்டுக்கல் - மட்டன் பிரியாணி, சிக்கன் பிரியாணி, புட்டு அரிசி, கன்னியாகுமரி - மீன் பிரியாணி, நீலகிரி - தினை உருண்டை, சிவகங்கை - செட்டிநாடு ஸ்னாக்ஸ், திருநெல்வேலி - பணியாரம், கடலைக்கறி, தினை புட்டு, விருதுநகர் - ரொட்டி ஆம்லெட், எண்ணெய் பரோட்டா, மதுரை - பனைமில்க் ஷேக்ஸ், ஐஸ் கிரீம்கள், கறி தோசை, கோலா உருண்டை, நாமக்கல் - பள்ளிபாளையம் சிக்கன், புதுக்கோட்டை - கார பணியாரம், இனிப்பு பணியாரம், ராகி அடை உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட உணவு வகைகளை, உடனடியாக சமைத்து, சுகாதாரமான முறையில் பரிமாறும் வகையில் 23 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், உடனடியாக உண்ணுவதற்கும் ஏற்ற (Ready to Eat) ஆயத்த உணவுப் பொருட்களை, உணவுத் தரச் சான்றிதழ் (FSSAI) பெற்ற குழுக்களைச் சேர்ந்த மகளிர் சுகாதாரமான முறையில் தயாரித்து, தகுந்த முறையில் கட்டுமானம் (Packaging) செய்து விற்பனை செய்திட 25 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

உணவுத் திருவிழா நடைபெறும் நாட்களில் மாலை நேரங்களில் காய்கறிகள் மற்றும் பூக்களைக் கொண்டு அலங்காரம் செய்தல், டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு, மின்னணு வணிகம், பேக்கிங் மற்றும் லேபிளிங்கின் முக்கியத்துவம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் உரிய சான்றுகள் பெறுவது குறித்த விபரங்கள், புதிய நிறுவனங்களை உருவாக்குதல், ஸ்டார்ட்அப் TN துவக்குதல், EDII ஆதரவுடன் நிறுவனங்களை உருவாக்குதல் குறித்த பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன.

மாலை நேரங்களில் தப்பாட்டம், கரகாட்டம், மயிலாட்டம், புலியாட்டம், மாடாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தெருக்கூத்து, பரதநாட்டியம், கருப்பசாமி ஆட்டம், கும்மிப்பாட்டு, குழு நடனம், மேற்கத்திய இசை நிகழ்ச்சிகள், கிராமியப் பாடல்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவியரின் கலைநிகழ்ச்சிகள், தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவிகளான தவில், நாதஸ்வரம், ராஜமேளம், நையாண்டிமேளம் போன்ற இசை நிகழ்ச்சிகளும், பேச்சுப் போட்டி, நாடகம் போன்றவையும் நடைபெறுகின்றன.

2025 நவம்பர் 22ஆம் தேதி முதல் 2025 டிசம்பர் 3ஆம் தேதி வரை மதுரை, தமுக்கம் மைதானத்தில் நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறும் மதி கண்காட்சி (சாரஸ் மேளா) மற்றும் உணவுத் திரு விழாவிற்கு அனுமதி இலவசமாகும்.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், மாநகராட்சித் துணை மேயர் தி.நாகராஜன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திருமதி க.வானதி, திட்ட இயக்குநர் (தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்) திருமதி செள.தமிழரசி உள்பட அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ் இலக்கியத்துக்கு அளவிட முடியா பங்களிப்பு செய்தவர்!

## கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைவுக்கு – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 24 -

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் மறைவையொட்டி துணை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ் இலக்கியத்துக்கு அளவிட முடியா பங்களிப்பைச் செய்த பெருமதிப்பிற்குரிய கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் மறைவுச் செய்தி அறிந்து வருத்தமுற்றேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதல் மகா கவிஞர் பாப்லோ நெரூதா வரை தனது இலக்கியச் சிறகை விரித்தவர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நேசிப்புக்குரிய எழுத்துலக நண்பர். மரபுக் கவிஞராய் தொடங்கி புதுக்கவிதையிலும் புதிய அலைகளை ஏற்படுத்திய படைப்பாளி.

‘வணக்கம் வள்ளுவ’ நூலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்ற கவிஞர் தமிழன்பன் அவர்கள், திராவிட இயக்கத்தின் மீது அசைக்க முடியாத பற்றுக் கொண்டிருந்தார்.

ஈரோடு தமிழன்பன் அவர்களின் மறைவு, இலக்கிய உலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவுக்கு இரங்கலையும், அவரது குடும்பத்தினர் நண்பர்கள் வாசகர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# அருமைத் தோழர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைவுக்கு நமது வீரவணக்கம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இரங்கல்!

*சென்னை, நவ. 24 -*

*திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-*

*நமது அருமைத் தோழர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் தமது 92ஆம் வயதில் (21.11.2025) மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவரின் இழப்பு எளிதில் ஈடு செய்யப்பட முடியாத பேரிழப்பாகும்.*

*புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பரம்பரை என்று போற்றத் தகுந்த கவிஞர்களுள் முதல் வரிசையில் உள்ளவர். முற்போக்குச் சிந்தனை யாளர்!*

*சென்னிமலையில் பிறந்தாலும் தம் பெயருக்கு முன்னொட்டமாக ஈரோடு என்று புனைந்து கொண்ட கொள்கை சார்ந்த தந்தை பெரியார் பற்றாளர்.*

*மறைந்த பெரும்புலவர் பெரியார் பேருரையாளர் பேராசிரியர் ந.இராமநாதன் அவர்களின் மாணவர் ஆவார். நம் இயக்கத் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளில், கவியரங்குகளில் பங்கு கொண்டு மகிழ்ந்தவர்!*

*மரபுக் கவிதையில் தொடங்கி நவீன புதுக்கவிதை முறைக்கு முன்னோடியாக இருந்தவர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வழங்கிய கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி விருது, வட அமெரிக்கத் தமிழ் சங்கத்தின் ‘உலக தமிழ்ப் பீட விருது’ போன்ற பல உயரிய விருதுகளைப் பெற்றவர்.*

*இவரின் படைப்புகள் 90க்கும் மேற்பட்ட கவிதை உரைநடைத் தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. வணக்கம் வள்ளுவ என்ற கவிதைப் படைப்பு நூலுக்குச் சாகித்ய அகாடமி விருது பெற்றவர். உலகின் பல நாடுகளிலும் பயணித்து, கவிதைச் சிறகை விரித்தவர். சென்னை புதுக்கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய கலைமாமணி ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கு சாந்தகுமாரி என்ற வாழ்விணையாரும், பாப்லோ நெருடா (டாக்டர்) (சிலி நாட்டின் உலகப் புகழ் பெற்ற கவிஞரின் பெயர் இது), பாரதிதாசன் (டாக்டர்) ஆகிய இரு மகன்கள் இவருக்கு உண்டு.*

*குடும்பத் தலைவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும் உற்ற தமிழ்ச் சுறும் நல்லுலக நண்பர்களுக்கும், அன்பர்களுக்கும், கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.*

### தமிழ் இலக்கிய உலகின் மாபெரும் ஆளுமை –

# மூத்த கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைவு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல் செய்தி!

சென்னை, நவ.24-

தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

செம்மொழித் தமிழின் மூத்த கவிஞரும், சாகித்திய அகாதமி விருது பெற்றவருமான ‘கவிஞர் ஈரோடு தமிழன்பன்’ அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று (22.11.2025 - சனிக்கிழமை) மறைவெய்தினார் என்ற செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், சொல்லொணாத் துயரமும் அடைந்தேன்.

காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் பிறந்து, தமிழின் சிகரங்களைத் தொட்டவர் ஈரோடு தமிழன்பன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெரிதும் போற்றப்பட்ட மகா கவிஞர் இவர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கவிஞர் சாகித்திய அகாதமி விருது பெற்றதைப் பாராட்டும் விதமாக, சென்னை அண்ணா நகரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர்தரக் குடியிருப்பினை வழங்கி, அவர் வாழும் காலத்திலேயே அவரைப் பெருமைப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மரபுக்கவிதை, புதுக் கவிதை, ஹைக்கூ, லிமரைக்கூ எனத் தமிழ்க் கவிதையின் அனைத்து வடிவங்களிலும் தனது தனித்துவமான முத்திரையைப் பதித்தவர். இவரது ‘வணக்கம் வள்ளுவ’ என்னும் கவிதை நூலுக்காக 2004-ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதுதவிர தமிழ்நாடு அரசின் கலைமாமணி உள்ளிட்ட பல உயரிய விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

கவிஞராக மட்டுமல்லமல், சென்னைத் தொலைக்காட்சியில் பல ஆண்டுகள் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றி, தனது கம்பீரமான குரலால் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்தவர். சிறந்த மேடைப் பேச்சாளர், எழுத்தாளர், ஓவியர் எனப் பன்முக ஆற்றல் கொண்ட ஒரு மாபெரும் ஆளுமையை இன்று தமிழ் இலக்கிய உலகம் இழந்து தவிக்கிறது. அன்னாரது மறைவு தமிழ் மொழிக்கும், இலக்கியத் துறைக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும் காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.”

இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்


